மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி

முன்னிலை : திருமதி **P.** ரங்கேஸ்வரி**.,B.Sc.,B.L.,**
நீதித்துறை குற்றவியல் நடுவர், சீர்காழி.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி(முழுக் கூடுதல் பொறுப்பு)

-------

2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் ஆவணி மாதம் 13-ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.169/2019-ல் இடைமனு எண்.01/2021**

1. ராஜா
2. அஞ்சலிதேவி
3. சேதுபதி
4. காயத்ரி

...மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்....

1. ராமலிங்கம்
2. மாவட்ட வருவாய் அலுவலர், நாகப்பட்டினம்
3. வருவாய் கோட்டாட்சியர், மயிலாடுதுறை.
4. வட்டாட்சியர், சீர்காழி
5. தமிழ்நாடு அரசு சார்பாக அதன் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம்

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.08.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுவாமிநாதன் அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A. ராம்குமார் அவர்களும் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு எஸ்.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியிருந்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பிற்கு எதிருரை தாக்கல் செய்வதற்கு போதுமான வாய்ப்புக்கொடுக்கப்பட்டிருந்தும் 31.3.2022-ம் தேதியன்று இறுதி வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்து அன்றையதினம் எதிருரை தாக்கல் செய்யாமையால் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி மனுதாராகள்/ வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17 - ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கானது தாவா "பி" அட்டவணைச் சொத்துக்கு 1-ம் பிரதிவாதி பெற்ற பட்டா செல்லாது என்று விளம்பல் பரிகாரம் கோரியும், தாவா "பி" அட்டவணைச் சொத்திலிருந்து 1-ம் பிரதிவாதியை வெளியேற்றி வசம் கிடைக்க சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும், தாவா "பி" அட்டவணைச சொத்திலுள்ள கட்டுமானங்களை அகற்ற வேண்டுமென செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையின் 7-வது பாராவில் 2-வது வரியில் நடைபாதையின் தென்புறம் என்பதற்கு பதிலாக தவறுதலாக தாவா "ஏ" ஷெடியூல் சொத்திற்கு தெற்கு என்றும், வழக்குரையின் சொத்து விவரத்தில் "பி" ஷெடியூல் சொத்தின் நான்கெல்லையில் ஜெயராமன் மனைக்கு தெற்கு, வாதியின் மனைக்கு மேற்கு என்பதற்கு பதிலாக பிரதிவாதி மனைக்கு மேற்கு என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ள விவரம் தற்பொழுதுதான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது. எனவே அதனை திருத்தம் செய்வதற்காக இந்த மனுவில் கண்டுள்ளவாறு வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **1-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். 1ம் எதிர்மனுதாரர்/ 1-ம் பிரதிவாதி 19.01.2021-ம் தேதியன்று தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 2-லேயே வழக்கின் சொத்துவிபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துவிபரம் தவறு என்று குறிப்பிட்டு காட்டி எதிர்வழக்குரையில் எதிர்கட்சி எடுத்த பிறகு அதனை மறைப்பதற்கே இந்த மனுவில் எல்லைகள் பொறுத்து தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ள விபரம் தற்போதுதான் தெரியவந்துள்ளது என்று கட்சி கட்சி செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது 1-ம்எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி வாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.132/2015 என்ற வழக்கிற்கு எதிர்வழக்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.132/ 2015 வழக்கின் சாட்சி விசாரணை தொடரப்பட்டுவிட்டது. மேற்படி அசல் வழக்கு எண்.132/2015 என்ற வழக்கில் இந்த வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு விரோதமாக இந்த இடைமனு அமைந்துள்ளது. வாதிகளுக்கு அசல் வழக்கு எண்.132/2015 வழக்கில் நல்லதோர் கட்சி இல்லை எனன்பதால் வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்துவதற்காகவே இந்த மனுவை மனுதாரர்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ளனர். வழக்கின் சொத்துவிபரத்தில் எதனடிப்படையில் நான்கெல்லைகள் வாதிகள் கூறினார்கள் என்று இடைமனுவில் குறிப்பிட்டுக் கூறவில்லை. தற்போது இந்த இடைமனுவின்

மூலம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் நான்கெல்லையை திருத்தக்கோருகிறார்கள் என்று குறிப்பிட்டுக் கூறாமல் பொத்தாம் பொதுவாக தவறுதலாக நான்கெல்லை தட்டச்சு செய்யப்பட்டுள்ள விரம் தற்போது வாதிகளுக்கு தெரியவந்தது என்று கூறியுள்ளது ஏற்கக்கூடியதல்ல. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

.4**. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6**. தீர்வு**

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் என்றும், அசல் வழக்கானது தாவா "பி" அட்டவணைச் சொத்துக்கு 1-ம் பிரதிவாதி பெற்ற பட்டா செல்லாது என்று விளம்பல் பரிகாரம் கோரியும், தாவா "பி" அட்டவணைச் சொத்திலிருந்து 1-ம் பிரதிவாதியை வெளியேற்றி வசம் கிடைக்க சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும், தாவா "பி" அட்டவணைச சொத்திலுள்ள கட்டுமானங்களை அகற்ற வேண்டுமென செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்குரையின் 7-வது பாராவில் 2-வது வரியில் நடைபாதையின் தென்புறம் என்பதற்கு பதிலாக தவறுதலாக தாவா "ஏ" ஷெடியூல் சொத்திற்கு தெற்கு என்றும், வழக்குரையின் சொத்து விவரத்தில் "பி" ஷெடியூல் சொத்தின் நான்கெல்லையில் ஜெயராமன் மனைக்கு தெற்கு, வாதியின் மனைக்கு மேற்கு என்பதற்கு பதிலாக பிரதிவாதி மனைக்கு மேற்கு என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ள விவரம் தற்பொழுதுதான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், எனவே அதனை திருத்தம் செய்வதற்காக இந்த மனுவில் கண்டுள்ளவாறு வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/ 1-ம் பிரதிவாதி 19.01.2021-ம் தேதியன்று தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 2-லேயே வழக்கின் சொத்துவிபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துவிபரம் தவறு என்று குறிப்பிட்டு காட்டி எதிர்வழக்குரையில் எதிர்கட்சி எடுத்த பிறகு அதனை மறைப்பதற்கே இந்த மனுவில் எல்லைகள் பொறுத்து தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ள விபரம் தற்போதுதான் தெரியவந்துள்ளது என்று கட்சி கட்சி செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கானது 1-ம்எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி வாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல்

வழக்கு எண்.132/2015 என்ற வழக்கிற்கு எதிர்வழக்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கு எண்.132/2015 வழக்கின் சாட்சி விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கு எண்.132/2015 என்ற வழக்கில் இந்த வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு விரோதமாக இந்த இடைமனு அமைந்துள்ளது என்றும், வாதிகளுக்கு அசல் வழக்கு எண்.132/2015 வழக்கில் நல்லதோர் கட்சி இல்லை என்பதால் வழக்கு நடவடிக்கைகளை காலங்கடத்துவதற்காகவே இந்த மனுவை மனுதாரர்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், வழக்கின் சொத்துவிபரத்தில் எதனடிப்படையில் நான்கெல்லைகள் வாதிகள் கூறினார்கள் என்று இடைமனுவில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றும், தற்போது இந்த இடைமனுவின் மூலம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் நான்கெல்லையை திருத்தக்கோருகிறார்கள் என்று குறிப்பிட்டுக் கூறாமல் பொத்தாம் பொதுவாக தவறுதலாக நான்கெல்லை தட்டச்சு செய்யப்பட்டுள்ள விரம் தற்போது வாதிகளுக்கு தெரியவந்தது என்று கூறியுள்ளது ஏற்கக்கூடியதல்ல என்றும், எனவே இம்மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்கள்/ வாதிகள் தாவா "பி" அட்டவணைச் சொத்துக்கு 1-ம்பிரதிவாதி 13.10.1986 அன்று பெற்ற பட்டா செல்லாது என்றும், அதன் பொருட்டு தாவா சொத்துக்கு வாதிகள் உரிமையாளர்கள் என்று விளம்பல் பரிகாரமும், அதனைத்தொடர்ந்து தாவா "பி" அட்டவணைச் சொத்திலிருந்து 1-ம் பிரதிவாதியை வெளியேற்றி வாதிகளுக்கு வசம் கிடைக்க சுவாதீன மீட்பு பரிகாரமும், தாவா "பி" அட்டவணைச் சொத்திலுள்ள கட்டுமானங்களை அகற்ற 1-ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் இம்மனுவில் வழக்குரையில் பாரா 7-ல் 2-வது வரியில் "ஏ" ஷெடியூல் சொத்தின் தென்புறத்தில் என்பதற்கு பதிலாக நடைபாதைக்கு தென்புறம் என்றும், வழக்குரையின் சொத்துவிவரத்தில் "பி" ஷெடியூல் சொபத்தின் நான்கெல்லையில் ஜெயராமன் மனைக்கு தெற்கு, பிரதிவாதி மனைக்கு மேற்கு என்பதை வாதியின் மனைக்கு மேற்கு என்றும் வழக்குரையை திருத்தம் செய்யவேண்டுமென இம்மனுவில் கோரியுள்ளார். மேற்படி தவறுகையான தட்டச்சுப்பிழை என்று மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தட்டச்சுப்பிழையை எந்த தருணத்தில் வேண்டுமானாலும் திருத்தம் செய்ய இயலும். எனவே இந்நிலையில் இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிப்பதால் வழக்கின் வழக்குமூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடாது என்பதால் இம்மனுவில் கண்டுள்ளவாறு பிராதினை திருத்தம்

செய்யவேண்டுமெனக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.
(முழுக்கூடுதல் பொறுப்பு)

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> -இல்லை-

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாணங்கள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை-

மா.உ.நீ. (மு.கூ.பொ.)

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 169/2019-ல்
இடைமனு எண். 01/2021
நாள் - 29.08.2022